ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது
අංක 2093/33 - 2018 ඔක්තෝබර් මස 17 වැනි බදාදා - 2018.10.17
*2093/33 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி புதன்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாயிருக்கின்ற தென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படும் என்றும் 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தல் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான் இத்தால் மூலம் பிரகடனம் செய்கின்றேன்.

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் மாலிம்பட பிரதேச செயலகப் பிரிவின் வெலிகாம கோறளை சிறு பிரிவின், கடுவன்கொட கிராமத்தில் அமைந்துள்ளதும் 2017.04.28 ஆந் திகதி நில அளவை அதிபர் அவர்களினால் தயாரிக்கப்பட்ட முற் பிரதிப்பட இலக்கம் எம்ஆர்/ எம்எல்பீ/2017/131 இல் துண்டு இலக்கம் A எனக் காட்டப்பட்டுள்ளதும் விஸ்தீரணம் சுமார் 1.4164 ஹெக்டயார் கொண்டதுமான காணித் துண்டின் எல்லைகள் பின்வருமாராகும்.

**01. துண்டு 'ஏ' - கடுவலகேவத்த மற்றும் புன்சிலமாஹாமிலாகே கொரட்டுவ - விஸ்தீரணம் : 1.4164 ஹெக்டயார்**

வடக்கு : வீதி, குணதாஸ முதலிகே உரிமைகோரும் ஹோம்பலஹேன, ஜினதாஸ வேரகொட உரிமைகோரும் எலோகந்த ; கிழக்கு: குணதாஸ முதலிகே உரிமைகோரும் ஹோம்பலஹேன மற்றும் ஜினதாஸ வேரகொட உரிமைகோரும் எலோகந்த வீதி (பிரதேச சபை); தெற்கு : வீதி (பிரதேச சபை) என். பீ. பலிஹவடன மற்றும் ராமசிறி பலிஹவடன உரிமைகோரும் கடுவலகேவத்த மற்றும் புஞ்சிலாகே கொரட்டுவ, யூ. ஏ. கருணாதாஸ உரிமைகோரும் இஹலகேவத்த; மேற்கு : என். பீ. பலிஹவடன மற்றும் ராமசிறி பலிஹவடன உரிமைகோரும் கடுவலகேவத்த மற்றும் புஞ்சிலாகே கொரட்டுவ, யூ. ஏ. கருணாதாஸ உரிமைகோரும் இஹலகேவத்த மற்றும் வீதி.

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.

குறிப்பு இல. : எல்டி: 4-3/9/2017/டப்ளியூஎஸ்/11.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
"மிஹிகத மெதுர",
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2018, ஓகத்து 27.

11 - 105

1A - G 28762 - 16 (2018/10) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.
இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk.எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.